**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**நாடகமும் அரங்கியலும்**

**தரம் 6**

# நாடகம் பற்றிய பயில்வு

நாடகம் ஒரு தனிக் கலைவடிவம். அது நேரடியாகவே படைப்பாக்க வெளிப்பாடாகும். ஒரு பொருளாக பார்க்கப்பெறாமல் ஒரு நிகழ்வாகப் பார்க்கப்பெறும் இந்நிகழ்வு உண்மையானதொரு கால அளவினுள் உண்மையானதொரு வெளியில் இடம்பெறும்.

நாடகம் என்பது செய்து காட்டப்படுவது ஆகும். குறிப்பிட்ட சூழலில் ஏதோ ஒன்றினை உடல் வழியாகவும் குரல் வழியாகவும், உணர்ச்சி வழியாகவும் காண்பிய வழியாகவும் செய்து காட்டுவதாகும். அது கணப்பிரசன்னமாக இருக்கும். ஆற்றப்படும் அந்தக் கணத்தில் அது நம் முன்னே பிரசன்னமாக இருக்கும். நாம் அதனைப் பார்க்கின்றோம். அது நம் கண் முன்னே நிகழ்கின்றது.

நாடகத்தின் அச்சாணி அம்சமாக அமைவது, அது ஏதோ ஒன்றைப் போலச் செய்வதாகும். பாத்திரங்கள் வாயிலாகப் போலச் செய்து காட்டப்படுகின்றன. நாடக எழுத்துரு நடிகனைச் செயற்பட வைத்துப் பார்ப்போரைத் துலங்கத் தூண்டுகின்றது.

நாடகத்தின் வாரத்தைகள் நடிக்கப்படுவதற்காகவும் பார்க்கப்படுவதற்காகவும் கேட்கப்படுவதற்காகவும் எழுதப்படுகின்றது. அவை முதலில் நாடகாசிரியரது மனதிலும் பின் நடிகனது உடலிலும் குரலிலும் இறுதியாகப் பார்ப்போரது மனங்களிலும் சந்திக்க வேண்டும். குறித்த நாடகமொன்றின் ஆற்றுகைக்கான பார்ப்போரது துலங்கலே நாடகமாகும். பார்ப்போரை ஆட்கொள்வதே நாடகத்தின் முதலாவது இலக்காக உள்ளது.

நாடகமானது துருவி ஆராயும் கண்களைக் கொண்டு, தனது சமூகத்தின் கனதியான பிரச்சினைகள், மோதல்கள், முரண்பாடுகள் என்பவற்றினைக் கூர்ந்து நோக்கி வெளிப்படுத்த வேண்டும். மோதலே நாடகத்தின் சாரம். இதனால் தான் மனித மோதலின் கதையே நாடகம் எனப்படுகின்றது.

நாடகமானது வகிபாகம் அன்றேல் பாத்திரங்கள் வாயிலாக அதாவது, தன்னை வேறொருவராக எண்ணிக்கொண்டு நடித்தல் மூலமாகவும், எடுத்துரைப்பு அன்றேல் கதைக்கூற்று அதாவது தொடர் சம்பவங்களையோ படிமங்களையோ பொருள் புலப்படுத்துமாறு ஒழுங்குபடுத்துவதன் மூலமாகவும் மொழி மூலமாக அதாவது சொல் சார்ந்த சொல் சாராத உடல் மொழி, முகபாவங்கள், வெளியின் பயன்பாடுகள் மூலமாகவும் சூழமைவுகள் மூலமாகவும் செய்து காட்டப்படுகின்றது.

நாடகத்தில் மோதுகை, பாத்திரங்கள், சொல்லாடல்கள், கரு, அரங்கவெளி, நடிகர், பார்ப்போர், சம்பவங்கள் போன்ற அம்சங்கள் அவசியமானவைகளாகக் கொள்ளப்படுகின்றன.

# நால்வகைச் சித்தரிப்புக்கள்

நாடகம் என்பது போலச் செய்வதாகும். நடிகன் ஒரு பாத்திரத்தை அன்றேல் சம்பவத்தை உள்ளவாறே மீள எடுத்துணர்த்துவதே போலச் செய்வதாகும். நடிகன் தனது உடல் வழியாகவும் குரல் வழியாகவும், உணர்ச்சி வழியாகவும், காண்பிய வழியாகவும் போலச் செய்தலை மேற்கொள்கின்றான்.

போலச் செய்வதற்கான உடல்வழிச் சித்தரிப்பு, குரல்வழிச் சித்தரிப்பு, உணர்ச்சிவழிச் சித்தரிப்பு, காண்பிய வழிச்சித்தரிப்பு எனும் நால்வகைச் சித்தரிப்புக்களும் பயன்படுத்தப்படுகின்றன.

நடிகன் ஒரு பாத்திரத்தை அன்றேல் சம்பவத்தை தனது அங்கங்களைப் பயன்படுத்தியே போலச் செய்து காட்டுகின்றான். அதாவது, அவனது உடல் நிலைகள், உடல் அசைவுகள், உடற் கோலங்கள் மூலம் இவை சித்தரித்துக் காட்டப்படுகின்றன. இவ்வாறு உடல்வழிச் சித்தரிப்பு போலச் செய்தலுக்கு பயன்படுத்தபெறுகின்றது.

நடிகன் போலச் செய்வதற்காக சொல்லாடல்கள், பேச்சுக்கள், பாடல்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றான். அவனது குரலின் ஓசைகள், அசைவுகள், நெகிழ்ச்சி, லலிதம், லாவகம், கவர்ச்சி, ஏற்ற இறக்கம், அழகு போன்வற்றின் மூலம் பாத்திரத்தை அன்றேல் சம்பவத்தை அதே போல மீளச் சித்தரித்துக் காட்டுகின்றான்.

பாத்திரத்தை அன்றேல் சம்பவத்தை போலச் செய்வதற்கு அவற்றினது உணர்ச்சிகள் வெளிவரும் வண்ணம் நடிகர்கள் இயங்குகின்றனர். கோபம், சோகம், வீரம், அற்புதம், பயம், அருவெறுப்பு, காதல், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சி வழிச் சித்தரிப்பின் மூலம் போலச் செய்தலை வெளிப்படுத்திக் காட்டுகின்றனர்.

போலச் செய்கின்ற போது பாத்திரத்தை அன்றேல் சம்பவத்தைப் பார்ப்போர் உணரும் வண்ணம் காண்ணாற் பார்க்கதக்கதான ஆடை அலங்காரம், ஒப்பனை, இசை, காட்சி, ஒளி, போன்றவற்றினையும் பயன்படுத்துகின்றார்கள். இதன் மூலம் பாத்திரத்தின் அன்றேல் சம்பவத்தின் தன்மையை வயது, சூழல், பண்பாடு, சமூக அந்தஸ்து, காலம், இடம் போன்றவற்றினை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

நடிகன் போலச் செய்தலை இயல்பானதாகவும் நம்பகத்தன்மை உள்ளதாகவும் வெளிப்படுத்திக் காட்டுவதற்கு நால்வகைச் சித்தரிப்புக்களும் பயன்படுத்தப்படுகின்றன.

# சொல்லாடல்

- ✓ நாடகத்தின் பிரதான ஆக்கக்கூறுகளுள் சொல்லாடலும் ஒன்றாகும்.
- ✓ அவை நடிப்பதற்காகவே எழுதப்பெறுகின்றன.
- ✓ எனவேதான் அவை வெறுமனே வார்த்தைகளாக அன்றிச் செயல் பொதிந்த சொற்களாகக் (Action Packed Words) கருதப்பெறுகின்றன.
- ✓ சொல்லாடல்கள் எனப்படுபவை இரண்டு அன்றேல் இரண்டிற்கும் மேற்பட்டோருக்கு இடையில் நிகழ்த்தப்படும் சொல் சார்ந்த கருத்துப் பரிமாற்றம் ஆகும்.
- ✓ சொல்லாடல், உணர்வுகளின் அடிப்படையிலே அமைந்திருக்கும்.
- ✓ எனவே அவற்றை கருத்துப் புலப்படும் வகையில் வெளிப்படுத்த வேண்டும்.
- ✓ பாத்திரங்களுக்கு இடையே சொல்லாடல் இடம்பெறும்.
- ✓ சொல்லாடல் மூலம் பாத்திரங்களையும், பாத்திரக் குணாம்சங்களையும், சூழமைவுகளையும் இனங்கண்டு கொள்ளலாம்.
- ✓ சொல்லாடலின் பின்னே மறைந்துள்ள அழகான கருத்துக்கள் புலப்படும் வகையில் அவை வெளிப்படுத்த வேண்டும்.
- ✓ அதற்காக சொல்லாடல் நுட்ப முறைகளைக் கையாள முடியும்.
- ✓ சொல்லாடல் நுட்ப முறைகள் ஆவன:-
    - தொனி
    - புறத்தெறிகை
    - வீச்சு
    - ஏற்ற இறக்கம்
    - மௌனம்
    - ஒலிக்குறி
    - மொழி
    - கவர்ச்சி
    - நளினம்
    - லாவகம்
    - ஒத்திசைவு
    - லயம்

- கதி

- ✓ நாடகத்தின் வகை, மோடி என்பவற்றிகு ஏற்ப சொல்லாடல் முறை மாற்றமடையும்.

  உதாரணமாக:- இலக்கிய நாடகம், சிறுவர் நாடகம் ஆகிய இருவகை நாடக சொல்லாடல்களும் ஒரே முறையில் அமைந்திருக்காது. யதார்த்த நாடகம், அபத்த நாடகம் என்பவற்றின் சொல்லாடல் முறைகள் ஒரே பாணியில் அமையாது.

- ✓ பாத்திரப் பண்பு, சூழமைவு என்பவற்றிகு ஏற்ப சொல்லாடல் வேறுபடும். உதாரணமாக இளமைத் துடிப்புள்ள கட்டிளமைப்பருவத்து பிள்ளையினதும், வயது முதிர்ந்த 75வயது ஓய்வூதியர் ஒருவரினதும் சொல்லாடல் வேகம், தொனி ஒரே முறையில் அமைய முடியாது.

- ✓ பிராணிப் பாத்திரங்களுடைய சொல்லாடல் முறையின் போது உடல் அசைவுகளும் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன.

- ✓ சிறுவர் நாடகத்தில் பிராணிப் பாத்திரங்கள், கற்பனைப் பாத்திரங்கள் போன்றனவும் இடம்பெறுகின்றன.

- ✓ எனவே, சிறுவர் நாடக சொல்லாடல்கள் அவ்வவ் பாத்திரங்களின் நடத்தைக்கோலத்தோடு பொருந்தவனவாகவும் சிறுபருவத்தினருக்கு பொருத்தப்பாடானதாகவும் அமைதல் வேண்டும்.

- ✓ சொல்லாடலில் வெறுமனே வார்த்தைகள் மாத்திரம் உள்ளடக்கப்படுவதில்லை. மனிதக் குரலினால் எழுப்பப்படும் ஒலிகள், ஓசையற்ற மௌனம் (வார்த்தைகளின் இடையில் நிலவும் மௌனம்) என்பனவும் அடங்கும்.

  உதாரணமாக : - ஆ…… எனக் கொட்டாவி விடுதல், ம்………. என வலியால் முனகுதல் "ஆ………. ஐயோ…….." என்ற கூச்சல் போன்றனவும் அடங்கும். அது போன்று நீண்ட வசனம் பேசிய பின் நிலவும் நிசப்தம் அதுவும் சொல்லாடலின் நுட்பங்களுள் ஒன்றாக கருதப்படக் கூடியது.

- ✓ நாடகாசிரியரது கருத்து நிலைச் சிந்தனைகள் பெரும்பாலும் பாத்திரங்களை மையமாகக் கொண்டு சொல்லாடல் மூலமாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. அவை பொருத்தமான பொருள் விளக்கத்துடன் பார்ப்போரை சென்றடைவது நடிகனை ஊடமாகக் கொண்டு வழிப்படுத்தும் நெறியாளரது கைகளிலேயே தங்கி உள்ளது.

# புதிதளித்தல்

புதிதளித்தல் என்பது முன்னாயத்தமின்றி உடனடியாக ஒரு செயலை, சூழமைவை சித்தரிப்பதே ஆகும். அதாவது விசேட ஆயத்தமும் ஒத்திகையும் இன்றி, வெவ்வேறு பாத்திரங்களை நடிப்பு மூலம் சித்தரிப்பது ஆகும். எழுத்துரு இல்லாமல் நிகழ்த்தப்படும் ஒரு நாடகம் என இதனைக் கூற முடியும். எந்தவொரு நிலைமையையும் உடனடியாக செய்து காட்டுதல் இதன் இயல்பும் பயனும் ஆகும். பேச்சினைப் பயன்படுத்தியும் இதனைச் செய்யலாம். பேச்சு இல்லாமல் வெறுமனே உடல் மொழியினைப் பயன்படுத்தியும் (ஊமம்) இதனை நிகழ்த்தலாம்.

புதிதளித்தல் செயற்பாட்டில் சிறுவர் முதல் வயது வந்தவர் வரை ஈடுபட்டு பல திறன்களை விருத்தி செய்து கொள்ள முடியும்.

புதிதளித்தல் மூலம் ஒருவரது கற்பனையை வளப்படுத்தி இயல்பான சித்தரிப்பு திறனை வெளிக்கொணர வாய்ப்புக்கள் கிடைக்கும். அத்துடன், சித்திரிப்பிற்காக சந்தர்ப்பம் ஒன்றினை சுயாதீனமாக தெரிவு செய்து கொள்ளவும், தம்மிடத்தே உள்ள போலச் செய்யும் திறன்களை சுயாதீனமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

புதிதளித்தல் நடிப்புத் திறன்களை வளர்ப்பதற்கு சிறந்ததொரு பயிற்சியாக அமையும். அதேவேளை, பொருத்தமான தீர்மானங்களை கணப்பொழுதில் எடுக்கும் திறனையும் வளர்க்கும். கூட்டாக செயற்படும் திறனையும் விருத்தி செய்து கொள்ள முடியும்.

மூன்று விதமான புதிதளித்தல் பற்றி இங்கு நோக்குவோம்.

1. பாத்திரங்களை புதிதளித்தல்
2. பொருட்களை புதிதளித்தல்
3. சூழமைவுகளை புதிதளித்தல்

பாத்திரங்களை புதிதளித்தலில் பிராணிகளையும் மனித மற்றும் கற்பனைப் பாத்திரங்களையும் சித்தரித்துக் காட்டலாம். எடுத்துக்காட்டாக சிங்கம், யானை, ஓநாய், நரி, கரடி போன்ற பிராணிகளையும் மதகுரு, அங்காடி வியாபாரி, குறிசொல்பவன், கற்பிணிப் பெண், தேவலோகப் பெண், வேற்றுக்கிரகவாசி போன்ற மனித மற்றும் கற்பனைப் பாத்திரங்களையும் அவற்றின் உள்ளார்ந்த இயல்புகளையும் புதிதளித்தல் மூலம் சித்தரித்துக் காட்டலாம்.

பாத்திரங்களைப் புதிதளிக்கும் போது பிராணிகளினதும் மனித மற்றும் கற்பனை பாத்திரங்களினதும் நடத்தைக் கோலங்கள் உள்ளார்ந்த இயல்புகளை கற்பனை செய்து வெளிப்படுத்திக் காட்டுதல் வேண்டும். இதற்காக இப்பாத்திரங்களின் தோற்றப்பாடுகள், மெய்நிலைகள், நடத்தைக் கோலங்கள் என்பவற்றினை அவதானிக்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பாத்திரங்களின் உணர்வுகளும் நடத்தைக் கோலங்களும் வேறுபட்டுக் காணப்படும். இவற்றினை புதிதளித்தல் மூலம் சித்தரித்துக் காட்ட வேண்டும்.

பொருட்களை கொண்டு புதிதளிக்கும் போது அப் பொருளின் அளவுப் பிரமாணம், தன்மை போன்ற விடயங்களை கவனத்திற்குக் கொண்டு செயற்பட வேண்டும். எடுத்துக்காட்டாக,

ஒரு சிறிய குடையினை தும்புத்தடியாகவோ அன்றேல் ஒரு பேனாவாகவோ பயன்படுத்த முடியாது. அதனை ஒரு ஒலிவாங்கியாகவோ அன்றேல் கத்தியாகவோ பாவணை செய்துகாட்டலாம்.

சூழமைவை புதிதளித்தல் என்பது, தரப்படும் சந்தர்ப்பங்களை எந்தவிதமான முன்னாயத்தமோ அன்றேல் ஒத்திகையோ இன்றி உடனடியாக சித்தரித்துக் காட்டுவதாகும். எடுத்துக்காட்டாக, பஸ் வண்டியினுள் பொதி ஒன்றினை கண்டெடுத்தல் எனும் சந்தர்ப்பத்தினை அன்றேல் சூழமைவினை புதிதளித்தல் மூலம் சித்தரித்துக் காட்டுதல்.

சூழமைவு என்பது சம்பவங்களின் தொகுதி ஆகும். இச்சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர் பண்பை கொண்டிருக்கும். இச்சம்பவங்களை விளங்கிக் கொண்டு அவற்றினை தமது அனுபவங்களுடனும் கற்பனையுடனும் புதிதளித்தல் மூலம் வெளிப்படுத்திக் காட்டுதல் வேண்டும். எடுத்துக்காட்டாக பஸ் வண்டியினுள் பொதியினை கண்டெடுத்தல் எனும் சூழமைவில், பஸ் வண்டியில் பிரயாணம் செய்தல், பொதியினைக் காணல், அதனை எடுத்துப் பிரித்தல் என பல வகை செய்கைகள் தொடராகக் காணப்படும்.

இத்தகைய புதிதளித்தளின் மூலமாகத் தான் கற்பனையும் படைப்பாக்கச் சிந்தனையும் விருத்தி அடையும்.

# நாட்டார் விளையாட்டுக்கள்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலின் ஒரு கூறாக நாட்டார் விளையாட்டுக்கள் உள்ளன. நாட்டுப்புற மக்களின் நாகரீகத்தோடும், பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்ததாகும். விளையாட்டை மனமகிழ்ச்சியுடைய செயல் என்பர். இவ்விளையாட்டுக்கள் பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றி உடல் நலம், உள நலம் பேணுபவையாகவும் உள்ளன. வாழ்க்கைக்குப் பயிற்சி அளிக்கும் களம் என்று விளையாட்டைக் கூறுவர்.

இவ்விளையாட்டுக்களைத் தனி விளையாட்டு, இருவர் சேர்ந்த சோடி விளையாட்டு, குழு விளையாட்டு எனும் பிரிப்புக்குள் உள்ளடக்கலாம். இவை சிறுவர்களுக்கு உரியவை மட்டுமன்றிப் பெரியவர்களாலும் விளையாடப்படுகின்றன. இவ்விளையாட்டுக்களைப் பாடலுள்ள விளையாட்டுக்கள், பாடலில்லா விளையாட்டுக்கள் எனவும் இரு வகைப்படுத்தலாம்.

இவ்விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் புலப்பயிற்சி இயற்கையாக நிகழ்கின்றது. படைப்பாக்கச் செயற்பாடுகளில் சிறந்த வெளிப்பாட்டுத்திறன் கிடைக்கிறது. உளப் போராட்டத்திற்கு தீர்வு கிடைக்கிறது. மேலும், சமூக ஒழுகலாறுகளையும், விழுமியங்களையும் காவிச் செல்கிறது. இவ்விளையாட்டில் கட்டுப்பாட்டு உணர்வும், பணிவும், ஒற்றுமை உணர்வும், தலைமைத்துவப் பண்பும், பிறருக்கு உதவும் மனித நேயமும் வளர்கின்றது.

நாட்டார் விளையாட்டுக்கள் பல உள்ளன அவற்றில் நாம் சிலவற்றை நோக்கின், பூப்பறிக்க வருகிறோம், பூ சொல்லி குட்டி போதல், பசுவும் புலியும், குழை குழையாய் முந்திரிக்காய், பல்லாங்குழி, தாயம் மற்றும் பிற.

நாட்டார் வியைாட்டுக்கள் மகிழ்வூட்டல், உற்சாகம் அளிக்கக் கூடியன. அவற்றைப் பாடலுடனும் ஆடலுடனும் மேற்கொள்ளும் போது அவர்களது கற்பனை ஆற்றல் விருத்தி பெறும்.

நாட்டார் விளையாட்டுக்களில் ஒன்றாக பசுவும் புலியும் விளையாட்டில் பங்குபற்றுநர்களில் இருவரைத் தவிர ஏனையோர் கைகளைக் கோர்த்து வட்டமாக இருப்பார்கள். இருவரில் ஒருவர் பசுவாகவும் மற்றவர் புலியாகவும் இருப்பார்கள். (பசு வட்டத்திற்குள்ளும் புலி வட்டத்திற்கு வெளியேயும் நிற்க வேண்டும்.) புலியாக இருப்பவருக்கும் வட்டமாக கைகோர்த்து இருப்பவர்களுக்கும் இடையே பின்வரும் உரையாடல் பாடல் இடம்பெறலாம்.

புலி :- சங்கிலி புங்கிலி கதவைத் திற

வட்டத்தில் இருப்பவர் :- நான் மாட்டேன் வேங்கை புலி

புலி :- பசு நிக்குதோ

வட்டத்தில் இருப்பவர் :- இல்லை

புலி :- பால் மணக்குது

வட்டத்தில் இருப்பவர் :- பக்கத்து வீட்டில்

புலி :- புல்லு போட்டு பார்க்கட்டோ

வட்டத்தில் இருப்பவர் :- ஓம்

இவ் உரையாடலின் போது, வட்டமாக கைகோர்த்து இருப்பவர்கள் பாடலுக்கு ஏற்ப அசைதல் வேண்டும். உள்ளே இருப்பவரும் தமக்கு விரும்பியவாறு பசுவின் அசைவை ஒத்ததாக அசையலாம். அவ்வாறே புலியாக இருப்பவரும் தமது ஆட்டத்தினை தீர்மானித்து ஆட வேண்டும். ஒருவரை ஒருவர் பிடிக்க முற்படும் போது (பசுவும் புலியும்), ஆட்டத்தினை வேறுபடுத்தி ஆடலாம். அதற்கு வட்டமாக நின்று பாடல் பாடிக் கொண்டு இருப்பவர்கள் தங்கள் குரலின் வீச்சுக்களைப் பயன்படுத்திப் பாட அதற்கு ஏற்ப பசுவாக இருப்பவரும் புலியாக இருப்பவரும் பல்வேறு ஆட்டக்கோலங்களை ஆடுவதற்கு முயற்சிக்கலாம். அவ்வாறே வட்டத்தில் இருப்பவர்களும் தமது ஆட்டத்தினை வேறுபடுத்தியும் வட்டம் நகர்ந்து செல்லுபடியாகவும் ஆட்டத்தினை கட்டி எழுப்புவதுடன், வட்டம் என்ற வடிவத்தினை முதன்மைப்படுத்தி கைகளைக் கோர்த்து நின்றவர்கள் கைகளை விட்டு தமக்குரிய ஆட்டத்தினை அன்றேல் குழுவாக ஆட்டத்தை அன்றேல், பசுவின் ஆட்டத்தினை அன்றேல், புலியின் ஆட்டத்தினை கட்டி எழுப்பிக் கொண்டு செல்லலாம்.

பசுவும் புலியும் விளையாட்டானது தனக்கு என ஒரு முறையில் விளையாடப்படுகின்ற போதும், ஆட்டத்தினை கட்டுருவாக்கம் செய்வதற்காக மேல்வருமாறு விளையாட முயற்சிக்கலாம். இவ்வாறான பல நாட்டார் விளையாட்டுக்களை இனங்கண்டு விளையாடுவதற்கு முயற்சி செய்யலாம்.

# சுதேச நாட்டார் கதைகள்

மனிதன் தோன்றிய அன்றே அவனுடன் நாட்டுப்புற கதைகளும் தோன்றின எனலாம். மனித வரலாற்றில் மொழியின் தோற்றத்துடன் அவனது சிந்தனை திறனூடாக வாய்மொழி இலக்கியம் வளர்ந்தது எனலாம்.

மனித குலம் வளர்ந்த கதை சுவையானது. மனிதனின் கதை மகத்தானது. மனித வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கதையாகின்றது. சில நிகழ்ச்சிகள் பெருங்கதைகள் ஆகின்றன. மனிதனின் ஆசைகள், அவலங்கள், தேவைகள், விருப்பு, வெறுப்பு, கனவுகள், கற்பனைகள் போன்றன கதைகள் ஆகின்றன. கதை கற்பனையை வளர்க்கின்றது. கற்பனைக் கதைகள் மனித வாழ்வின் மகத்துவங்களை பேசுகின்றன. கதை சொல்வதும் கேட்பதும் மனிதனின் இயல்பு. அது ஒரு கலையாகும்.

நாட்டார் கதை உருவாக்கத்தின் பிண்ணனியை ஆராய்கின்ற போது, ஆதிகால மனிதன் நாடோடி வாழ்க்கையை நடத்தினான். கால்நடை மேய்ச்சல்களை தொழிலாகக் கொண்டு வாழ்ந்த போது, மேய்ச்சலுக்காக அலைந்து திரிந்ததை கதையாகக் கூற ஆரம்பித்தான். ஆதி மனிதன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்கு கதையாக கூற ஆரம்பித்ததே கதையின் தொடக்கம் என கூறலாம். இயற்கை நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட அச்சம், பயம், மகிழ்ச்சி போன்றவற்றால் உருவான மனப் பதிவுகளை கூறுவது மட்டுமல்லாமல், மக்கள் மனதில் நேர்ந்த பாதிப்பு, உயர்வு தாழ்வு, அறம் உரைத்தல், சாதிப் பூசல், காதல் ஒழுக்கம், முட்டாள்தனம், கள்ள நட்பு, மந்திரம், புத்திசாலித்தனம் முதலியவையும் கதைகள் தோன்றக்காரணம் ஆகின. மேலும், பொழுதுபோக்கிற்காகவும், நீதிகளை வலியுறுத்தவும் கதைகள் புனையப்பட்டன.

உதாரணம் :- தேவதைக் கதைகள்

ராஜா ராணிக் கதைகள்

முல்லா கதைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாட்டார்புற கதைகள் வாய்மொழியாக பரப்பப்பட்டதாகவும், மரபு வழிப்பட்டதாகவும் உள்ளன. பல நூற்றாண்டு காலமாக வாய்மொழியாக மக்களிடையே வழங்கி வருவதால் பல மாற்றங்களை அவை உள்வாங்கின. ஏனெனில், ஒவ்வொரு முறையும் ஒன்று போற் பிழையின்றி கதை சொல்வது என்பது முடியாத காரியம். எனவே காலப்போக்கில் கதைகள் மாறுதலைப் பெறுகின்றன. கதை சொல்பவரின் கற்பனைக்கும் கேட்பவரின் பொறுமைக்கும் ஏற்ப கதைகள் குறுகியதாகவோ நீண்டதாகவோ அமையும். சொல்லும் முறையும் கேட்பவருக்கு ஏற்ப மாறுபடும்.

சுதேச நாட்டார் கதைகளில் உட்பொதிந்துள்ள விடயங்களை ஆராய்கின்ற போது அவை மக்களின் நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், வாழ்வியல் முறைகள், இவற்றோடு மருத்துவம், விளையாட்டுக்கள், அறிவியல் விடயங்கள், பழமொழிகள், விடுகதைகள், தொழில்கள், கைவினைப் பொருட்களின் பயன்பாடுகள், திருவிழாக்கள், தெய்வ வழிபாடுகள், தொழில்நுட்பவியல், கட்டிடக்கலை போன்ற செய்திகளை படம்பிடித்து காட்டுவனவாக உள்ளன.

இவற்றை ஒட்டுமொத்தமாக நோக்குகின்ற போது கதைகளின் நோக்கம் மக்களுக்கு அறக் கோட்பாட்டை உணர்த்துவதாகும். மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அறிவூட்டி வழிப்படுத்தவதற்கும் பொழுதுபோக்கு சாதனமாக மட்டுமன்றி, வளரும் குழந்தைகளுக்கு நீதிப் போதனை கூறுவதற்காகவும் நீதி உணர்ந்த கதைகள் புணையப்பட்டு, நம்பிக்கைக் கதைகளாக வெளிப்படுத்தப்பட்டன. கதைகளைக் கூறுகின்ற போது, அதன் மூலம் ஏற்படும் மகிழ்ச்சி, ஒற்றுமை, வாழ்வியல் அனுபவங்கள், நல்ல தொடர்பாடல், உறவுகளை ஒன்றிணைக்கும் தன்மை போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

## சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் பாடல்கள்

ஒரு நாட்டு மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், வரலாறு, நாட்டு நடப்பை காட்டுவதற்காக மட்டுமன்றி கிராமங்களின் மண் வாசனையைப் புலப்படுத்தி மனிதர்களின் பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்தி நிற்பவை சுதேச நாட்டார் கலை வடிவங்கள் ஆகும்.

மனிதன் முதலில் பேசத் தொடங்கிய போது அவனுடைய உள்ளத்தில் மொழியியல் சிந்தனை ஏற்பட்டது. அதன் விளைவாக வாய்மொழிக் கலைகள் தோன்றின. நாட்டார் இசை மரபின் முக்கியத்துவம் வாய்மொழியாக பரவியதும் ஒரு பண்பாகும். அதன் அடிப்படையில் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை தாலாட்டுப் பாடலில் தொடங்கி, விளையாட்டு, காதற் பாடல்களில் வளர்ந்து தொழிற்பட்டு, திருமணப் பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடலில் முடிவடைகின்றது. இப்பண்புகளைப் பற்றிப் பாடுவதாலே இவை இன்றும் மக்கள் இலக்கியங்களாக காணப்படுகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் எளிமையாகவம் இனிமையாகவும் இருப்பதுடன் வாயில் பிறந்து செவி வழியாக கருத்துடனும் உலாவருபவை. இப்பாடல்கள் பல்வகைப்பட்டு காணப்படுகின்றன. அவையாவன, இயற்கைப் பாடல்கள், காதற் பாடல்கள், தொழிற்பாடல்கள், விழாப் பாடல்கள், மீன் பிடித்தற் பாடல்கள், போர்ப் பாடல்கள், கடற்கொள்ளையர் பாடல்கள், விடுகதைப் பாடல்கள், கதைப் பாடல்கள், கும்மிப் பாடல்கள், வில்லுப் பாட்டுக்கள், புராணக் கதைப் பாடல்கள், சமுதாயக் கதைப் பாடல்கள், வீர தீரக் கதைப் பாடல்கள், காவடிப் பாடல்கள், கரக பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இப்பாடல்களின் தனித்துவமான பண்புகளை ஆராய்கின்ற போது அதில் பொதிந்துள்ள விடயங்கள் ஆவன,

- ♣ வாய்மொழியாகப் பரவுதல்
- ♣ மரபுவழிப்படுத்தல் - அதாவது பரம்பரை பரம்பரையாக ஒரு சந்ததியில் இருந்து இன்னுமொரு சந்ததிக்கு கொண்டு செல்லப்படுதல்.
- ♣ சூழலுக்கு ஏற்ப பல்வேறு வடிவங்களில் திரிபடைந்து நிலைபெறல்.
- ♣ யாரால் இயற்றப்பட்டது எனக் குறிப்பிட்டு சொல்ல முடியாத தன்மை.

- ஏதாவது ஒரு வாய்பாட்டு நெறிக்குள் அடங்குதல்.
- பிரதேசத்தின் தனித்துவம் மற்றும் சமூக அமைப்பின் இயல்பான தனித்துவம் வெளிக்காட்டப்படுதல்.
- எளிய மொழிய நடை சார்ந்த கருத்து வெளிப்பாட்டு தன்மை.
- கருத்துக்களை ஒளிவுமறைவின்றி நேரடியாக சொல்லும் பாங்கு, உள்ளதை உள்ளவாறும் கூறும் பாங்கு (இயல்பு நவிச்சி)
- எளிமையாக இசையுடனும் சந்தத்துடனும் பாடக்கூடியவை.
- பொதுவான இலக்கண வரையறைக்குட்படாத போதும் எதுகை, மோனை, அடுக்குத் தொடர், இரட்டைக்கிழவி போன்ற அமைப்புக்களை கொண்டிருத்தல்.
- ஒருவருக்காக பிறர் பாடுவது, தாங்களாகவே பாடுவது என்ற இரு நிலைத் தன்மை கொண்டவை.
- தோன்றிய காலத்தை தெளிவாக வரையறை செய்ய முடியாத நிலை.
- இசைக்கருவிகள் தோன்றவில்லை.
- கள்ளம் கபடம் அற்ற மனிதர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டின் மூலம், கிராமிய மக்களின் காதல் உறவுகள், பிள்ளைப் பாசம், குடும்ப உறவு என்பவற்றை விளங்கிக் கொள்ள உதவும்.
- கிராமப்புற மக்களின் ஜீவனோபாய முறைகளையும் வாழ்க்கை ஒழுக்கங்களையும் மதிநுட்பத்தையும், ஆக்கத்திறனையும், கற்பனை ஆற்றலையும் காட்டுவன.

இவ்வாறாக நாட்டுப்புற பாடல்களில் தனித்தன்மை காணப்பட்டாலும் அக்காலத்தில் தோன்றிய கதைப் பாடல்கள் அம்மானை என்ற பெயரில் உள்ளன. இப்பாடல்கள் வினாவிடை நிலை, சொல் நிலை, எண்ணிக்கை நிலை, கதை நிலை என பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. இக்கதைப் பாடல்களின் ஊடாக நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் கூறப்படுகின்றன.

இக்கதைப் பாடல்கள் இன்று வீர காவியங்களாகப் போற்றப்படுவதுடன் மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களையும் சமூகத்திற்கு கூறி நிற்கின்றன.

# விடுகதைகள்

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது. அதாவது மறை பொருளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டிய கதையே ஆகும். அறிவூட்டுவதும் சிந்தனையைத் தூண்டுவதும் ஆராயும் தன்மையும் இதன் குறிக்கோள் ஆகும். விடுகதையானது புதிர், நொடி எனப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. தொல்காப்பியர் விடுகதையை பிசி என்று குறிப்பிடுகின்றார். இவ்விடுகதைகள் பெரியோருக்கும் சிறியோருக்கும் இடையில் நல்ல தொடர்பு நிலையை ஏற்படுத்துகின்றது.

உதாரணம் :- தாய் இனிப்பாள்

மகள் புளிப்பாள்

பேர்த்தி மணப்பாள்

(பால், தயிர், வெண்ணெய்)

(இவ்வாறான விடுகதைகளைத் தேடித் தொகுக்கவும்.)

# பழமொழிகள்

அனுபவமுதிர்ச்சியின் பிரசவங்களே பழமொழிகள் எனலாம். அதாவது அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த அறிவுச்சுருக்கமே பழமொழிகள் எனக் கூறுவார்கள். பழமொழிகள் வாழ்க்கையில் உயர் பண்புகளையும், உணர்வுகளையும் பல்வேறு கோணங்களில் பார்த்து ரசித்த மக்கள் இரத்தினச் சுருக்கமாக சில வார்த்தைகளை உருவாக்கி அழகான உச்சரிப்புக்களில் வெளிப்படுத்தி உள்ளனர். இப்பழமொழிகள் சிந்தனை ஆற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் துணையாக இருப்பதுடன் சமுதாயத்தில் அறப் கோட்பாடுகளை வலியுறுத்தவும் தவறு செய்யும் போது இடித்துரைக்கவும் சமுதாயம் இதைச் செய்யலாம், சமுதாயம் இதைச் செய்யக்கூடாது என கட்டளை இடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஒருவரையோ அன்றேல் ஒரு செயலையோ நேரடியாக கூறாமல் மறைமுகமாகக் கூறும் அரிய விந்தையாக பழமொழிகளை நம் முன்னோர்கள் கூறியதை நாம் அறிய முடிகின்றது.

உதாரணம் : - தன் கையே தனக்கு உதவி

திரைகடல் ஓடித் திரவியம் தேடு

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை

# கும்மி – சமூக பண்பாட்டு வரலாற்று அம்சங்கள்

நாட்டுப்புற கலைகளில் ஒன்றான நாட்டுப்புற ஆடல்களாக கும்மி, கோலாட்டம், காவடி, கரகம், வசந்தன், மகிடி, ஒயிலாட்டம், தப்பாட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாட்டார் கலைகளில் ஒன்றான கும்மியினை எடுத்து நோக்கின், கும்மி ஆட்டமானது கோலாட்டத்தின் முன்னோடி என்றும் கூறுவர். இசைப்பதற்கு கருவிகள் இல்லாத காலத்தில் கைகளால் தட்டி, அதன் நின்று ஒலித்த ஓசையை பாடுகின்ற பாடலுக்கு ஏற்ற வகையில் ஒருங்கிணைந்து ஆடுவர். கிராமியப் பெண்களின் அழகிய கலையாக கும்மி ஆட்டத்தினை குறிப்பிடுவர். ஆனால் அக்காலத்தில் இருந்து கும்மி ஆட்டத்தை ஆண்களும் ஆடி வந்தார்கள். எனினும், ஆண்களின் கும்மியை விட பெண்களின் கும்மியே ரசிக்கும் திறன் கொண்டதாகும். கும்மிப் பாடலும் ஆடலும் தெய்வங்களின் வழிபாட்டிற்காக வந்ததாகும்.

எடுத்துக்காட்டாக, மழை வேண்டி அம்மனுக்கு நிகழ்த்தப்படும் முலைப்பாரிச் சடங்கின் போது, பெண்கள் கும்மி கொட்டுகின்றனர். அதனை முலைக்கொட்டு என்றும் கூறுகின்றனர். அம்மனுக்கு காப்புக் கட்டி, முனை ஓடுகளின் எரு மண் இட்டு, நவதானியங்களைப் பரப்பி, நீர் விட்டு பாதுகாத்து வருவார். தினமும் அம்மன் கோவிலைச் சுற்றி பெண்கள் பாடல் பாடிக் கும்மி அடிப்பார்கள்.

தெய்வ வழிபாட்டிற்காக தொடங்கிய கும்மி தொடர்ந்து பூப்பூச் சடங்குகளின் போதும், விழாக்களின் போதும், இறப்பு வீட்டின் போதும் நிகழ்த்தப்பெறும் கிராமிய மணம் மாறாத இந்தக் கும்மியினை ஊர் கூடி நின்று விருப்பமாகவும் வேடிக்கையாகவும் கண்டு மகிழ்வார்கள். இக்கும்மிப் பாடல்கள் பெரும்பாலும் தென்மாங்கு, காவடிச்சிந்து வகைகளாகவே இருக்கும். கும்மி ஆட்டத்தின் அமைப்பு வட்ட வடிவம் ஆகும். கும்மி அடிக்கும் பெண்கள் வட்டமாக சூழ்ந்து நின்று ஆறு நிலைகளில் ஆடுவார்கள் என்பதை பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

1.மெல்ல நடந்து நடந்து அடித்தல்.

2.நடந்து நின்று நடந்து அடித்தல்.

3.குனிந்து நிமிர்ந்து அடித்தல்.

4.குதித்து குதித்து அடித்தல்.

5.தன் கையை கொட்டி அடித்தல்.

6.எதிரில் உள்ளவர் கைகளுடன் கொட்டி அடித்தல்.

# பிள்ளை அழுத கண்ணீர் - நாடக நயப்பு

- நாடகப் பிரதியாக்கம் -கலாநிதி. சி. ஜெயசங்கர்

விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம் கோண்டாவிலைப் பிறப்பிடமாக கொண்டவர்.

நடிகர்.

கூத்து கலைஞர்.

அரச ஆய்வாளர்.

கவிஞர்.

கட்டுரையாளர்.

“குழந்தை. ம. சண்முகலிங்கம் அவர்களது ‘பாலுக்குப் பாலகன்’ சிறுவர் நாடகத்தையும் அன்ரனியோ கிறிம்சியின் மூலக் கதையையும் அடிப்படையாகக் கொண்டு இந்நாடகம் உருவாக்கப்பட்டது.”

- சி. ஜெயசங்கர் (நாடகாசிரியர்) –

“மனிதர்கள் மனிதர்களுடனும் ஏனைய உயிர்களுடனும் சுற்றுச் சூழலுடன் இணைந்து வாழும் வாழ்க்கை முறையை உருவாக்கும் உலகம் தழுவிய முயற்சிகளில் ஒரு சிறு துரும்பாக “பிள்ளை அழுத கண்ணீர்” சிறுவர் நாடகம் உருவாக்கப்பெற்றிருக்கின்றது.”

- நாடகாசிரியர் -

- நாடகத்தின் கரு – ‘சூழலில் பசுமை பேணுதல்’

சூழலில் வறட்சி காரணமாகப் பசுமை இல்லை என்பதை உணர்த்துவதற்காக பிள்ளை அழுத கண்ணீரைத் துடைப்பதற்காக எலிக் குஞ்சார் பாலைக் குடித்துவிட்டு சங்கிலித் தொடராக பசுமையைக் காணவென செல்கின்றார். ஆடு – வயல் - குளம் - மேசன் - மலை என்ற பாத்திரங்கள் தொடர்புபடுத்தப்படுகின்றன. இடையே கொக்கு, தவளை போன்ற பாத்திரங்கள் வந்து போகின்றன. நீர் ஊற்றி மரம் வளர்க்க, மரம் வளர்ந்து நீர் தரும் என்கின்ற விடயம் அடிப்படையாக அமைந்துள்ளமையை நாடக எழுத்துரு சுட்டிக்காட்டிடுகின்றது. ஆகவே, பசுமை பேணுதல் என்பது இந்நாடகத்தின் அடிப்படைக் கருவாக அமைந்துள்ளது என்பதை நாடக எழுத்துருவை வாசித்து கண்டடிறிந்து கொள்ளுங்கள். மேலும் நாடகப் பிரதியின் ஊடாக,

- ✓ ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல்.
- ✓ விடாமுயற்சி செய்தல்.
- ✓ மரங்கள் நாட்டுவதன் அவசியம்

- ✓ ஒற்றுமையான செயற்பாடு
- ✓ செளிப்பான உலகில் வளமான வாழ்வு

போன்ற விடயப்பரப்புக்களும் அடங்கி உள்ளதைக் காணலாம்.

- ➢ நாடகப் பாத்திரங்கள்.
  - ♣ எலிக்ஞ்சார் - பிரதான பாத்திரம் - கதையை நகர்த்துவதும் கதைக்குரியதும்.
  - ♣ ஆடக்கா
  - ♣ வயலம்மா
  - ♣ கொக்கக்கா
  - ♣ குளத் தாத்தா
  - ♣ தவளைக் குஞ்சார்
  - ♣ கொத்தனார்
  - ♣ மலை மாமா
  - ♣ பிள்ளை

  மற்றும் பாடகர்

தயாரிப்பு:- திருமதி.ஜெயந்தி சந்திரகாந்தன்,
ஆசிரியர்,
கிளி/பூநகரி மத்திய கல்லூரி